Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 02

திங்கட்கிழமை 28 நவம்பர் 2022

கார்த்திகை 12 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

# கண்ணீரால் நனைந்தனர் கல்லறை மேனியர்கள்

## தமிழர் தாயகத்தில் மாவீரர் நாள் பேரெழுச்சி நினைவேந்தலில் அணிதிரண்ட உறவுகள்



இரணைப்பாலை துயிலும் இல்லத்தில் பிரதான ஈகச் சுடரை இரு மாவீரர்களின் தாயார் ஏற்றுகிறார்.



முல்லைத்தீவு, முள்ளியவளை துயிலும் இல்லத்தில் கைக் குழந்தையுடன் ஈகச் சுடர் ஏற்றும் தாயார்.

யாழ்ப்பாணம், நவம்பர் 28

**தமிழீழத் தனியரசு அமைப்பதற்காக வீரச்சாவடைந்த வீரமறவர்கள் நினைவாக, மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்று இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் நெஞ்சை நெகிழ வைப்பனவாக அமைந்தன. தாயகக் கனவோடு சாவினைத் தழுவிய சந்தனப்பேழைகளின் - மாவீரர்களின் - பெற்றோர், உற்றார், உரித்துடையோர், களமாடிய சக போராளிகள் எனப்பலரும் திரண்டு கண்ணீர் சிந்தி அஞ்சலித்தனர்.**

»11



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் மாவீரரான 2ஆம் லெப்டினட் சங்கரின் தந்தையார் லண்டனில் நேற்று இடம்பெற்ற மாவீரர் நாளில் பொதுச்சுடரை ஏற்றி வைத்தார். (ஒ-இ)

## வானில் சுடர்விட்டது மாவீரர் நாள் தீபம்

### யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் நாள் ஈகச்சுடர் புகைக்கூண்டு மூலம் வானில் ஏற்றப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஒழுங்கமைப்பிலேயே நேற்று இவ்வாறு

»11

### முல்லைத்தீவு, வவுனியாவில்

## மாவீரர்நாளில் நேற்று பொலிஸார் ஈனத்தனம்

யாழ்ப்பாணம், நவ. 28

தாயக மக்களால் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இந்தநிலையில் முல்லைத்தீவு மற்றும் வவுனியாவில் பொலிஸார் குழப்பங்களை - இடையூறுகளை ஏற்படுத்தியிருந்தனர்.

முல்லைத்தீவில் அலம்பில் துயிலும் இல்ல வாசலில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் வரவேற்பு வளைவை நேற்றுக்காலை பொலிஸார் சேதப்படுத்தி அகற்றினர். இவ்வாறான வளைவுகள் எவையும் அமைக்கப்படக் கூடாது என்ற எச்சரிக்கையை விடுத்து அடாவடியாக அதனை அவர்கள் அப்புறப்படுத்தினர். ஆனாலும் சில மணி நேரத்தில் மீளவும் ஏற்பாட்டாளர்களால் மாவீரர் வளைவு அமைக்கப்பட்டு மாவீரர் நாள் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

வவுனியா நகரசபை மண்டபத்தில் மாவீரர் நாள் ஏற்பாடுகள் நேற்று இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு சென்ற பொலிஸார், வைக்கப்பட்டிருந்த

»11

## பேராதனைப் பல்கலையிலும் மாவீரர் நாள் சுடரேற்றல்

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகத்தில் மாத்திரமல்லாது, தமிழர்கள் வாழும் இடங்களில் எல்லாம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டன.

»11



## இ.போ.ச.வினர் பணி நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 28

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை ஊழியர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

»11



## ஒளிந்திருந்து ஒளிப்படம் எடுத்த சிறிலங்கா இராணுவத்தினர்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணம், வடமாராட்சி - எள்ளங்குளம் துயிலும் இல்லம் முன்பாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த வருவோரை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினர் மற்றும்

»11

## மாவீரர்நாளை குழப்பும் சதிமுயற்சி பிசுபிசுப்பு

யாழ்ப்பாணம், நவ. 28


மாவீரர் நாளை குழப்புவதற்கு அரச அடிவருடிகள் எடுத்த சதிமுயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.


மாவீரர் நாளான நேற்றுக்காலை யாழ்ப்பாண நகரப் பகுதிகளில், 'மாவீரர் நாள் தவிர்க்க முடியாத காரணங்களால் நாளை (இன்று) கடைப்பிடிக்கப்படும்' என்று தமிழ்த்

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆவி கலங்கிடும் வேளையில் எங்கள் அழுகுரல் கேட்கிறதா?"

















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# “இங்கு கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா குழியினுள் வாழ்பவரே?”


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவனின் கை பேசியை பிடுங்கிய புலனாய்வாளர்

கிளிநொச்சி, நவ. 28

**சிறுவனின் கை பேசியை பொலிஸ் புலனாய்வாளர்கள் பிடுங்கிய சம்ப வம் வன்னேரிக்குளத்தில் நேற்று இடம்பெற்றது.**

மாவீரர் பெற்றோரைக் கௌரவிப்பு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அந்த நிகழ்வை காணொலிப் பதிவை சிறு வன் மேற்கொண்டான். இதனைய டுத்து சிறுவனின் கை பேசியை அங்கு நின்ற பொலிஸ் புலனாய்வா ளர்கள் பிடுங்கினர்.

இதனை அவதானித்த தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருடன் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டார். அதன் பின் னர் புலனாய்வாளர்கள் தாம் பிடுங் கிய கை பேசியை திருப்பி ஒப்படைத் தனர். (ஒ-113)



## எள்ளங்குளம் படைமுகாம் முன்பாக அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

வடமராட்சி, உடுப்பிட்டி - எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத் துக்கு அருகில் மாவீரர் நாளான நேற்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையிலான குழுவின ரால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் 551ஆவது படைப்பிரிவு முகாம் அமைந்துள்ள நிலையில் துயிலும் இல்லத்துக்கு வெளியே ஈகச் சுடரேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட் டது. அந்தப் பகுதியில் வீதியின் இருபுறமும் வீதி மறிப்புக்கள் போடப்பட்டு இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையை முன் னெடுத்திருந்தனர். (ஒ-26)



## நேற்றைய மாவீரர் நாளில் நந்திக்கடலில் அஞ்சலி

முல்லைத்தீவு, நவ. 28

தமிழீழ தனியரசுக்காக உயிர்நீத்த மாவீரர்களுக் காக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் நந்திக்கடலில் நேற்று மலர் தூவி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

'எங்கள் பெருமைமிகு வரலாற்றின் சோக மான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே நந்திக்கடல். ஏராளமான எங்கள் உறவுகளின் கண் ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன் னையை வணங்கி, தாயக விடுதலைக்காக உயிர்நீத்த எங்கள் மாவீரச் செல்வங்களுக்கு மலர் தூவி அஞ் சலி செலுத்துகின்றேன்'- என்றார் ரவிகரன். (ஒ-இ)



## வீரமறவர்களை நினைவுகூர்ந்து ஆலயத்தில் நேற்று அன்னதானம்

யாழ்ப்பாணம், நவ. 28

அளவெட்டியிலுள்ள நரசிங்க வைரவர் ஆலயத் தில் மாவீரர் நாளான நேற்று அவர்களை நினைவு கூர்ந்து சிறப்பு பூசை வழிபாடுகளும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெற்றது.

வலி. வடக்கு பிரதேசசபையின் முன்னாள் உறுப் பினர் பிரபாகரன் இதனை ஏற்பாடு செய்திருந் தார். (ஒ-27)



## முதல்வித்து சங்கருக்கு நேற்றுக்காலை அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் இரண்டாம் லெப்ரினன்ட் சங்கருக்கு அவரது பூர்வீக இல்லத்தில் மாவீரர்நாளான நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. வல்வெட்டித் துறை கம்பர் மலையில் உள்ள அவரது வீட்டில் மாவீரர் பண்டி தரின் தாயார் ஈகச்சுடர் ஏற்றினார். (ஒ-26)



## கப்டன் பண்டிதருக்கும் வீட்டில் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் கப்டன் பண்டிதருக்கு அவரது பூர்வீக இல்லத்தில் மாவீரர் நாளான நேற்று ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத் தப்பட்டது. மாவீரர் பண்டிதரின் தாயார் சுடரேற்றினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லா வீரர்களுக்கும் சிங்களப் படையினருக்கு மிடையே நடைபெற்ற சமரில் இயக்கத் தின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கப் டன் ப.இரவீந்திரன் (பண்டிதர்) வீரச்சாவு அடைந்தார். இந்தச் சம்பவம் 1985 ஜன வரி 9ஆம் நாளன்று, யாழ்ப்பாணம் அச்சுவேலியில் நடைபெற்றது. (ஒ-26)



## கோப்பாய் துயிலுமில்லத்தில் ஈகச்சுடரேற்றி அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த இடத்தில் தற்பொழுது இராணுவத்தின் 51 ஆவது படைப் பிரிவு செயற்பட்டு வரும் நிலையில், மாவீரர் நாளான நேற்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கத்தால் படைப்பிரிவில் தலைமையக முன்றிலில் ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஒ-26)

## முதல் கரும்புலி மில்லருக்கும் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதலா வது தற்கொடை போராளி கப்டன் மில்லரின் நினை வாக நெல்லியடி மகா வித்தியாலயத்தின் முன்பாக நேற்று ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் நாளான நேற்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையி லான குழுவினரால் இந்த அஞ்சலி முன்னெடுக்கப் பட்டது. (ஒ-26)



## தமிழ் அரசிலும் நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்திலும் நேற்று மாலை மாவீரர் நினை வாக ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தப்பட் டது. இந்த நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர் சி.வீ. கே.சிவஞானம் கலந்துகொண்டார். (ஒ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முதலில் இதை நிறுத்தட்டும்!

கடந்த இரண்டு வருடங்களை விடவும் இம்முறை மாவீரர் நாளுக்கான நேரடிக் கெடுபிடிகளை குறைத்திருந்தாலும், மறைமுகமான அச்சுறுத்தல்களையும், இடையூறுகளையும் ஏற்படுத்த இலங்கை அரசாங்கமும், படைகளும் சற்றும் தவறவில்லை. குறிப்பாக பீல்ட் பைக் அணியின் அச்சுறுத்தும் வகையிலான ரோந்துகள், திடீர் சோதனைச் சாவடிகள், தேவையற்ற விசாரணைகள், துயிலுமில்லங்களை சிரமதானம் செய்தோர் மற்றும் அஞ்சலி செய்தோரை ஒளிப்படம் எடுத்தல் என்று உளவியல் ரீதியான அச்சுறுத்தல்களை சிறிலங்காப் படையினர் மாவீரர் வாரத்தில் தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தனர். இவற்றையெல்லாம் மேலோட்டமாகப் பார்க்கும் போது அவை வெருட்டுவதற்காக மட்டுமே செய்யப்பட்ட விடயங்களாகத் தோன்றக்கூடும். ஆனால், அதன் பின்னே உயிர் பறிக்குமளவுக்கு ஆபத்துகள் இருப்பதை கடந்தகால அனுபவங்கள் உணர்த்துகின்றன.

2001 க்குப் பின்னரான சமாதான காலத்தில், படைத்தரப்பு முகாம்களுக்குள் முடங்கியிருந்தபோது தமிழ் இளையோர் பகிரங்கமாக பல செயற்பாடுகளில் ஈடுபட்டனர். படையினரின் காவலரண்களை அகற்றக்கோரி போராடுதல், நினைவேந்தல்கள், எழுச்சி தினங்கள், பொங்கு தமிழ் போன்ற நிகழ்வுகளை பெருமெடுப்பில் மேற்கொள்ளல் என்று தமிழ் இளையோர் தமது உரிமைக்கான செயற்பாடுகளை பட்டவர்த்தனமாக மேற்கொள்ளும் போதெல்லாம் அவற்றை சிறிலங்காப் படையினர் ஒளிப்படங்களாக எடுத்து ஆவணப்படுத்தினர். கூடவே 'எங்கள் கைகள் தான் கட்டப்பட்டுள்ளன, கண்கள் அல்ல' என்று படையினர் சொல்வதுமுண்டு. அந்தச் சொற்களின் பின்னால் ஒளிந்திருந்த பயங்கரம், சமாதான ஒப்பந்தம் சாகடிக்கப்பட்டு போர் மூண்டபோது வெளிப்பட்டது. படையினர் ஏற்கனவே ஒளிப்படங்களாக எடுத்து வைத்த சம்பவங்களோடு தொடர்புடையவர்கள் கடத்தப்பட்டனர் அல்லது சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆகவே 'செல்போனில் படம் எடுத்து வைப்பதால் என்ன நடந்துவிடப்போகின்றது?' என அலட்சியமாக நாம் நடக்கக்கூடாது. மாறாக அவ்வாறு நம் அனுமதியில்லாமல் ஒளிப்படங்களாக எடுக்கும் செயற்பாட்டுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் செயற்பாடு அவசியமாகின்றது.

மாவீரர்நாளில் மட்டும் தான் இப்படி கமெராக்களையும், செல்போன்களையும்தூக்கிக்கொண்டு படையினரோ அல்லது புலனாய்வாளர்களோ வருகிறார்கள் என்றில்லை. ஆர்ப்பாட்டம், பேரணி, கவனவீர்ப்பு, நினைவேந்தல்கள் என்று எல்லா நிகழ்வுகளிலும் இவர்களைக் கட்டாயமாகக் காணமுடியும். தமிழர் தாயகத்தில் குண்டூசி கீழே விழுந்தால்கூட, அதனையும் படமெடுத்து மேலிடத்துக்கு அனுப்புவதே இவர்களின் தலையாய கடமை. இத்தனைக்கும் போதைப்பொருள் கடத்தலும், பாவனையும் கொடிகட்டிப் பறக்கும் இன்றைய காலத்தில் இந்தக் கமெராக்களையும், செல்போன்களையும் தூக்கி எறிந்துவிட்டு கொஞ்சம் விழிப்போடு காவல் இருந்தால், அவற்றைக் ( போதைப்பொருள்களை) கட்டுப்படுத்தியிருக்கலாமே. இப்படி கமெராக்களிலும், போன்களிலும் படமெடுத்து என்ன பயன்? ஆயுதம் ஏதுமற்ற அப்பாவி மக்களின் அஹிம்சை ரீதியான போராட்டங்களையும், நினைவேந்தல்களையும் இப்படி அச்சுறுத்துவதை விட, நாட்டைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கும் போதை மாபியாக்களை ஒழிப்பதுதானே படைத்தரப்புக்கு முன்னுள்ள இப்போதைய சவால். அப்படி எதைச் செய்யவேண்டுமோ அதைக் கோட்டை விட்டுவிட்டு, தன் கண்ணீருக்கு கால்வாய் தேடும், போரால் நொந்துபோன ஒரு இனத்தின் கண்ணீர் விடும் சுதந்திரத்தைக் கூட, கமெராக்களாலும், செல்போன்களாலும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் வன்மத்தை என்னவென்பது?

போர் முடிவுற்ற பின்னர் தமிழ்மக்கள் இதுவரை எத்தனையோ கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். தங்கள் காணிகளை மீட்க , தொடர்ச்சியான இருப்புப் போராட்டத்தையும் கேப்பாபிலவில் மக்கள் நிகழ்த்தியிருந்தார்கள். இப்படி அவர்கள் மேற்கொள்ளும் எந்தவொரு போராட்டத்திலும் நாட்டின் சட்டதிட்டங்களை மீறவில்லை. அரச சொத்துக்களை சேதமாக்கவில்லை. வன்முறையை நிகழ்த்தவில்லை. அப்படியிருந்தும், தம் துயரை வெளிப்படுத்தும் மக்களை அச்சுறுத்தும் வகையில் , படைத்தரப்பினர் ஒளிப்படங்களை எடுப்பது ஏன் என்று பலருக்கும் புரியவில்லை. தமிழ் மக்களின்பிரச்சினைகளைசுதந்திரதினத்துக்குள்தீர்க்கப்போவதாகப் பீற்றிக்கொள்ளும் ரணில் விக்கிரமசிங்க, முதலில் இந்த படைத்தரப்பின் ஒளிப்பட அச்சுறுத்தல்களை இ[illegible] செய்யட்டும், அதன் பின்னர் இனப்பிரச்சினை[illegible]தைப் பற்றிப் பார்க்கலாமே.


## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022



மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்.

– ஸ்டோலிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)



# தமிழீழ விடயத்தில் இந்தியா வஞ்சகம்!

## வைகோ தெரிவிப்பு



சென்னை, நவ.28

தமிழீழ விவகாரத்தில் இந்தியா வஞ்சகமும் துரோகமும் செய்தது என தமிழக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 68ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சென்னை எழும்பூரில் உள்ள ம.தி.மு.க. தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் அதன் பொதுச் செயலாளர் வைகோ கேக் வெட்டி கொண்டாடியதுடன் தொண்டர்களுக்கு இனிப்பு வழங்கினார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர் வரலாற்றில் ஈடு இணையற்ற நிகரற்ற சேனைகளை நடத்தக்கூடிய மாவீரர் பிரபாகரன். இலங்கைப் படைகள் பிரபாகரனின் படைகளை தோற்கடித்திருக்க முடியாது.

போரிலே பின்னடைவு ஏற்பட்டாலும் கடைசி வரை மக்களை பாதுகாப்பதிலே அவர் கவனமுடன் இருந்தார். ராஜபக்ச கூட்டம் இனப்படுகொலை செய்துவிட்டு ஜெனிவா மனித உரிமைகள் மன்றத்தில் இனப்படுகொலை நடக்கவில்லை எனக்கூறி வருகிறது.

தமிழீழ விவகாரத்தில் இந்தியா வஞ்சகம் செய்தது, துரோகம் செய்தது. தமிழீழம் தான் தீர்வு, தமிழைச் சொல்லி, திருக்குறளைச் சொல்லி, பாரதியாரைச் சொல்லி தமிழக மக்களை ஏமாற்றிவிடலாம் என இந்தியப் பிரதமர் மோடி நினைக்கிறார், அது ஒரு போதும் நடக்காது. அரசியல் சட்டத்துக்கு விரோதமாக தமிழக ஆளுநர் செயற்படுகிறார். பாரதிய ஜனதாவின் கைப்பாவையாக ஊதுகுழலாக செயற்படுகிறார். தமிழகத்துக்கு விரோதமாக செயற்படுகிறார்.

மோடி காசி தமிழ் சங்கம் என்கிற பெயரில் தமிழக மக்களை ஏமாற்ற நினைக்கிறார். மக்கள் ஏமாறமாட்டார்கள். எதிர்வரும் ஆண்டில் ம.தி.மு.க. சார்பில் தமிழீழ பாசறை பயிலரங்கம் நடத்தத் திட்டமிட்டு உள்ளோம். வைகோவின் உயிர் பிரபாகரனுக்கு கடமைப்பட்டது. ராஜீவ் கொலை குற்றவாளிகளை விடுதலை செய்தமை குறித்து மத்திய அரசு மறு சீராய்வு தாக்கல் செய்தது பச்சை துரோகம் - என்றார்.

(எ-இ)

நாளை

29.11.2022
செவ்வாய்க்கிழமை
கார்த்திகை 13

சுபநேரம் : 10.43 - 12.13
ராகுகாலம்: 03.13 - 04.43

ஷஷ்டி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சா கடத்திய இளைஞர் கைது

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நீர்வேலி, கரந்தனில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

கஞ்சாவைக் கொள்வனவு செய்து மாங்குளத்தில் இருந்து நீர்வேலிக்குப் பயணித்த இளைஞரை பின்தொடர்ந்த விசேட அதிரடிப் படையினர் இளைஞ ரைக் கைது செய்தனர் என்று தெரிவிக் கப்பட்டது.

மாங்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத் துக்கு கஞ்சா கடத்தப்படவுள்ளது என்று கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமை யவே இளைஞர் கைது செய்யப்பட் டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 100 கிராம் கஞ்சாவும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவித்த விசேட அதிரடிப் படையினர், சந்தேகந பர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரி வித்தனர்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-27)

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் ஆறுமுகசாமி

**(முன்னாள் பலநோக்கு கூட்டுறவுசங்க ஊழியர்-சங்கானை)**

தோற்றம் 17.12.1942 — மறைவு 27.11.2022



பண்ணாகம், சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாக வும் கொண்ட அமரர் தர்மலிங்கம் ஆறுமுகசாமி அவர்கள் நேற்று (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - சின் னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்க ளான சுந்தரம்பிள்ளை - நல்லமுத்து தம்பதியரின் மருமக னும், காலஞ்சென்ற ஈஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, அன்னம்மா, இலட் சுமிப்பிள்ளை மற்றும் சிவபாக்கியம் (முன்னாள் மருத்துவ மாது மேற் பார்வையாளர்-சங்கானை), பரமசிவம் (கீர்த்தா அச்சகம்- சங்கானை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11. 2022) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**த.பரமசிவம்**
**077 625 3909**

**தகவல் :**
**உறவினர்கள்.**

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும், சைவப் பெருவள்ளலாருமான

# சேர் பொன். இராமநாதன்

அவர்களின்

# 92 ஆவது குருபூசை தின விழா

**29.11.2022 செவ்வாய்க்கிழமை**

அன்புடையீர் !

நிகழும் சுபகிருது வருடம் கார்த்திகைத் திங்கள் 13 ஆம் நாள் (29.11.2022) திருவோண நட்சத்திரம் கூடிய செவ்வாய்க்கிழமை அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அத்திவாரமிட்டவரான **சேர்பொன். இராமநாதன்** அவர்களின்

## 92ஆவது குருபூசைத் தினமாகும்

இதனையொட்டி அன்று காலை 8.00 மணி தொடக்கம் 8.30 மணி வரை பல்கலைக்கழகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் **அருள்மிகு ஸ்ரீ பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரப் பெருமானுக்கு** விஷே பூசை நிகழ்வுள்ளது. அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்று காலை 8.30 மணிக்குப் பல்கலைக்கழக வளவிலுள்ள **சேர் பொன். இராமநாதன்** அவர்களின் திருவுருவச் சிலைக்கும், பல்கலைக்கழக சபா மண்டபத்திலுள்ள (Board Room) அவர்களின் திருவுருவப் படத்திற்கும், துணைவேந்தர் **பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜா** அவர்கள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வும் இடம்பெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநனர் சபை,**
**ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலனசபை,**
**இந்து மன்றம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

(CS47844)(3/6)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**28.11.2022**

மலர்வு 27 . 06 . 1948 — உதிர்வு 01 . 12 . 2019



யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியைப் பிறப்பிடமாகவும்
முள்ளியவளை, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் திருமதி கமலாதேவி இராஜரட்ணம்

*திதி* : சுபகிருது வருடம் கார்த்திகை 12 ஆம் நாள் வளர்பிறை பஞ்சமி (28.11.2022)

மூன்று ஆண்டுகள் கடந்தும் மீளாத் துயரில் நாங்களின்றும்
குடும்ப குலவிளக்காய் அனைவரையும் அரவணைத்தாய்
துணைவனுக்கு உறுதுணையாய் அவன் சென்ற இடமெலாம் சென்றாய்
துணைவனிவன் தற்போது தனிமையில் தடுமாறுகின்றேன்.

அம்மா என்ற உறவு அற்புதமானது
அன்புடன் தான் வளர்த்து அறிவையும், பண்பையும் நிறைத்து
வளமான வாழ்க்கையை வளமார உளமார வாழவைத்த
அன்புத் தெய்வமே, அம்மா பூவுலகிலிருந்து விடைபெற்று
விண்ணுலகம் விரைந்தீர்களே ! மூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டன

உங்கள் புன்னகை பூத்த வதனமதை எண்ணுகையில்
மனம் வேதனையால் துவள்கிறது. எம் நெஞ்சமெல்லாம்
தங்களின் நல்வாசம் வீசிட விரைந்த உங்கள் ஆத்மா
நன்னிலைபெற்று தில்லைக்கூத்தன் திருவடி அடைய
சிந்தையால் சிரம் தாழ்த்தி வேண்டுகிறோம்.

**236/2 மாடசாமி கோவில் வீதி,**
**பண்டாரிகுளம்,**
**வவுனியா.**

**என்றும் [illegible]**
**கணவர், பிள்ளைகள், [illegible]**
**பேரப்பிள்ளைகள், சகோதரி,**
**சகோதரர்கள்.**

(cs.21936 (2.6)

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 03 . 1958 — மறைவு 26 . 11 . 2022



### பாலசுந்தரம் மகிழ்மலர்

நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் மகிழ்மலர் அவர்கள் கடந்த (26.11.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஞானசுந்தரம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா, நாகேஸ்வரி, சபாரட்ணம், தவமணி, ஆகியோரின் பெறா மகளும், பாலசுந்தரத்தின் அன்பு மனைவியும், கஜலக்சன், கிசோ ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் இராசமலர், பொன்மலர் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், சற்குணநாதன், சற்குணராசா, கணேசநாதன், காலஞ்சென்ற பாலச்சந்திரன், சாந்தகுமாரி, சாந்தரூபி, சிவரூபி, வசந்தரூபி, சந்திரகுமார் ஆகியோரின் மைத்துனியும், பாமினி, பிரியதர்சன், கேமப்பிரியா, பிரவின், பிரியங்கன், சுமித்திரன், சுகிர்தன் ஆகியோரின் சிறிய தாயும், றிஜிகா, பிரவிகா, அனுசன் ஆகியோரின் பெரிய தாயாரும், நிசாந்தினி, தமிழினி, கார்த்திகாயினி, பாலறமணன், தர்சிகா, சர்வின், பிரவின், கஜபானுஜன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2022) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 221 5649
071 591 1616 (கணவர்)
075 543 7215 (மகன்)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 22010) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சாமுவேல் மாகிறேற் பெஞ்சமீன்



அவர்கள் நேற்று (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.11.2022) திங்கட்கிழமை சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை குருமனையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (29.11.2022) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அம்மாவின் வசிப்பிடமான 27/1, பழைய பூங்கா வீதி, இல்லத்திலிருந்து மாலை 3.00 மணியளவில் இறுதி நல்லடக்க ஆராதனை நடைபெற்று, பரி.யோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(CS 22008) 1-6

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-08, நெடுங்குளம் வீதி, ஆதன இல 1.3.7 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் இராயப்பு பிரான்சிஸ் நிக்கலஸ் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், பாங்சால் வீதி இலக்கம் 231 ஐ, சேர்ந்த இளையதம்பி மகேஸ்வரி அவர்கள் 25.04.1979ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு வே.நடராசா முகதாவில் 1377ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் இல.39,செபஸ்ரியன் வீதியைச் சேர்ந்த இராயப்பு பிரான்சிஸ் நீக்கிலாஸிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த இராயப்பு பிரான்சிஸ் நீக்கிலாசும் பெண் மேரி மெக்கலனும் 08.04.1992ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு செ. கணபதிப்பிள்ளை முகதாவில் 126ஆம் இலக்க அறுதி (நிபந்தனை) உறுதி மூலம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த நாகலிங்கம் சிவகுருநாதன் கைம்பெண் யோகராணிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த நாகலிங்கம் சிவகுருநாதன் கைம்பெண் யோகராணி 23.06.1994 ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை முகதாவில் 235ம்இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த இராயப்பு பிரான்சிஸ் நீக்கிலாசும் பெண் மேரி மெக்கலினுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் நீர்கொழும்பு இல.25, மடுவத்தையைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் கைம்பெண் மேரி மெக்கலினும் பிரான்சிஸ் நீக்கிலஸ் டொனல் நீகனும் பிரான்சிஸ் நீக்கிலஸ் றொபேட் கரிஷனும் 21.09.2016ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு செ. கணபதிப்பிள்ளை முகதாவில் 3679ம் இலக்க நன்கொடைக் உறுதி மூலம் நீர்கொழும்பு, இல.25, மடுவத்தையைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் அன்ரன் பிரான்சிஸ் நீக்கிலசுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் நீர்கொழும்பு இல.25, மடுவத்தையைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் கைம்பெண் மேரி மெக்கலினும் பிரான்சிஸ் நீக்கிலஸ் றொபேட் கரிஷனும் பிரான்சிஸ் நீக்கிலஸ் அன்ரன் பிரான்சிஸ் நீக்கிலஸ் அவர்கள் 21.09.2016ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை முகதாவில் 3680ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நீர்கொழும்பு இல.25, மடுவத்தையைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் டொனல் நீகன் அவர்களுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் நீர்கொழும்பு இல.25, மடுவத்தையைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் கைம்பெண் மேரி மெக்கலினும்: பிரான்சிஸ் நீக்கிலஸ் டொனல் நீகனும்: பிரான்சிஸ் நீக்கிலஸ் அன்ரன் பிரான்சிஸ் நீக்கிலஸ் ஆகியவர்கள் 21.09.2016ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை முகதாவில் 3681ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நீர்கொழும்பு, இல.25, மடுவத்தையைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் றொபேட் கரிஷனுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் 520/M/01/ சிவர்த்தன வீதி, ராகமயைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் டொனல் நீகன் 28.07.2016ம் திகதியிட்ட நில அளவையாளர் கே.கனகசபை அவர்களால் வரையப்பட்ட 6592ம் இலக்க நில அளவைப்படத்திற்கு அமைய 01.07.2019ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு யூ.பி அன்ரன் றஞ்சித்குமார் முகதாவில் 232ம் இலக்க உறுதிப்படுத்தல் உறுதி மூலம் ஆதன விபரங்களை குறிப்பிட்டு வெளிப்படுத்தி உறுதிப்படுத்தல் உறுதி நிறைவேற்றியுள்ளார்.

குறித்த ஆதனம் நீர்கொழும்பு இல. 25, மடுவத்தையைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் அன்ரன் பிரான்சிஸ் நீக்கிலஸ் 01.07.2019ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு யூ.பி அன்ரன் றஞ்யித்குமார் முகதாவில் 233ம் இலக்க வெளிப்படுத்தி திருத்திய உறுதி வரைந்துள்ளார்.

குறித்த ஆதனம் 112, புதிய வீதி, உப்புக்குளம் வடக்கு, மன்னாரைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் றொபேட் கரிசன் என்பவர் 01.07.2019ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு யூ.பி அன்ரன் றஞ்யித்குமார் முகதாவில் 234ம் இலக்க வெளிப்படுத்தி திருத்தல் உறுதி வரைந்துள்ளார்.

குறித்த ஆதனம் நீர்கொழும்பு, இல.25, மடுவத்தையைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் அன்ரன் பிரான்சிஸ் நீக்கிலஸ்: 520/M/01/ சிவர்த்தன வீதி, ராகமயைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் டொனல் நீகன்: 112, புதிய வீதி, உப்புக்குளம் வடக்கு, மன்னாரைச் சேர்ந்த பிரான்சிஸ் நீக்கிலஸ் றொபேட் கரிசன் ஆகியோர் 14.02.2020 திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு யூ.பி அன்ரன் றஞ்சித்குமார் முகதாவில் 307ம் இலக்க அறுதி உறுதி மூலம் இல.74/58, பிள்ளையார் கோவிலடி, நெடுக்குளம், கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தையைச் சேர்ந்த சிவகுணதாசன் விஜயகுமாரி வழங்கி யுள்ளனர்.

ஆதன விபரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை. "கடற்கரை வயல்" உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபை அவர்களினால் 28.07.2016ம் திகதி அளந்து வரையப்பட்ட 6592ம் இலக்கப் படத்தில் துண்டு 4 எனக் காட்டப்பட்ட நில பரப்பு சைபர் (00) குழி இரண்டு தசம் ஐந்து (2.55) (இதன் முற்பதிவு A/51/27). இன்னும் குறித்த நில அளவைப்படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு ஒன்று குழி பதின்மூன்று தசம் ஒன்பது ஏழு (13.97) (இதன் முற்பதிவு A/51/28).இன்னும் குறித்த படத்தில் துண்டு 3 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு சைபர் குழி இரண்டு தசம் மூன்று ஆறு (2.36) (இதன் முற்பதிவு A/51/29).

இவை தற்போழுது ஒன்றாக்கப்படடு ஆட்சி செய்யப்பட்டவாறு நில பர. இரண்டு (02)குழி ஆறு தசம் ஏழு ஒன்பது (06.79)

இந்த நிலப்பரப்பு இரண்டு (02) குழி ஆறு தசம் ஏழு ஒன்பது (06.79)க்கும் எல்லைகள்.

கிழக்கு : நெடுங்குளம் வீதி
வடக்கு : ஆறுமுகம் தம்பையாவின் ஆதனம்
மேற்கு : செல்லையா கணேசனின் ஆதனம்
தெற்கு : ஆறுமுகம் செல்லத்துரை, கணபதி செல்லத்துரை, பரமேஸ்வரி கதிர்வேலு கதிர்காமலிங்கம் என்பவர்களுக்குரிய ஆதனங்கள்.


ஆதனவரி மதிப்பீட்டு எண் 1.3.7 நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

தற்போது சிவகுணதாசன் விஜயகுமாரி இவ்வாதனத்தை தமது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சிவகுணதாசன் விஜயகுமாரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(CR 38542)(3/6)

# மரண அறிவித்தல்



தோற்றம்
15 . 03 . 1938

இறப்பு
27 . 11 . 2022

## திருமதி இரத்தினசிங்கம் தேவாம்பிகை

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் முழுங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசிங்கம் தேவாம்பிகை 27.11.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சிவகாமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் அவர்களுடைய அன்பு மனைவியும், சிவசோதிநாதன், புஸ்பலீலாவதி, ஆனந்தராசா, ஸ்ரீநாதன், கிருபாகரமூர்த்தி, ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புத்தாயாரும் புஸ்பயேந்தி, விஜகுமாரி, உதயகுமாரி, ஜெயறஞ்சினி, மாலதி, இராசேந்திரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் முழங்காவிலில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முழங்காவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 072 3728, 077 553 2011**

(cr 38570) (2.6)

# ஆதனப் பெயர் மாற்றம்

**யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 20 கலீபா அப்துல்காதர் வீதியில் அமைந்துள்ள ஆதன இல 12 ஆதன பெயர் மாற்றம் செய்வது தொடர்பான அறிவித்தல்.**

குறித்த ஆதனத்தின் ஆதன பெயரானது எமது பதிவேட்டில் வைத்திகிறிஸ்ரியும் சகோதரர்களும் என காணப்படுகிறது. இவ்வாதனத்தை மவுன்காமல் வீதி காரையூரைச் சேர்ந்த கிறிஸ்தோபிள்ளை பேதுறுப்பிள்ளை மறுபெயர் செல்லத்துரை, இராசநாயகம் பிலிப் நிக்கோலன் மறுபெயர் சின்னராஜா பெண் மேரியம்மா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு சி.சி. சோமசேகரம் முகதாவில் 14.09.1958 ம் திகதியிடப்பட்ட இல 5182ல் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் "தம்பாலையடியும் பராயடியும்" விஸ்தீரண நிலப்பரப்பு 1 குளி 10 1/2 அளவுடைய வீடும் வான் பயிர் வகைகளுடன் கூடிய ஆதனத்தை செல்லையா சின்னராசா மகள் ஞானரசம் என்பவருக்குவழங்கியுள்ளார்.

மேற் குறித்த அளவுடைய ஆதனத்தை யாழ்ப்பாணம் நாவாந்துறை தற்போது சாந்தமண்டல் தேவிநகர் சென்னை 41 ஐ சேர்ந்த அருளப்பு கிறிஸ்தோபிள்ளையும் பெண் ஞானரசமும் தமது அற்றோனி தத்துவகாரர் மொனிபாஸ் இமானுவல் என்பவர் மூலம் பிரசித்த நொத்தாரிசு எம் தியாக ராசா முகதாவில் 04.08.2007 ம் திகதியிடப்பட்ட இல 9819 ல் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் எலியாஸ் அமலன் பெண் யூலியற் சகாயமலர் என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார்.

மேலும் நாவாந்துறை தெற்கு நாவலர் வீதி இல 12 இல் இருந்து தற்போது பிரான்சில் வசிக்கும் எலியாஸ் அமலனும் பெண் யூலியற் சகாயமலரும் தமது அற்றோனி தத்துவகாரரான மனுவல் வெளிப்பட்டு எலியாஸ் மூலம் வெளிப்பட்டு பிரசித்த நொதத்தாரிசு சி.இளங்கோவன் முகதாவில் 31.08.2021ம் திகதியிடப்பட்ட இல 13629ல் நிறைவேறிய வெளிப்படுத்தலும் உறுதிப்படுத்தலும் உறுதி நிறைவேற்றியுள்ளார்கள்.

மேற்படி வெளிப்படுத்தலில் குறித்த 9819 ம் இலக்க உறுதியின் ஆதன அட்டவணையில் "வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை "தம்பாலையடியும் பராயடியும் நீண்ட காலம் ஆட்சி செய்த பாகம் விஸ்தீரண நிலப்பரப்பு 1 குளி 10 1/2 இதில் சொரியலாய் 5/45 பங்கும் வீடும், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும், கடையும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும் என்பதற்குப் பதிலாக தவறுதலாக வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை "தம்பாலையடியும் பராயடியும் (நிலப்பரப்பு 1 குளி 10 1/2 யும் வீடும், கிணறும் செய்பயிர், வான்பயிர்களும் கடையும் மற்றுமதைச் சேர்ந்தவைகளும் என காட்டப்பட்டுள்ளதென்றும்.

மேலும் இவ்வாதனத்தில் விஸ்தீரண நிலப்பரப்பு 1 குளி 10 1/2 ல் சொரியலாய் 40/45 இனை பங்குக்காரர்கள் நிந்தப்படுத்திக் கொண்டது போக எமக்கு மீதி சொரியலாய் 5/45 பங்கினையும் நிந்தப்படுத்தி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.பத்மகாந்தன் அவர்களால் 09.05.2021 ம் திகதியில் தயாரித்த 289 ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 என சுட்டியபடியும் நீண்டகால ஆட்சிபடி விஸ்தீரண நிலப்பரப்பு 0 குளி 12.92 என காட்டப்பட்டுள்ளதென்றும் வெளிப் படுத்தி உறுதிப்படுத்தியுள்ளார்.

வெளிப்படுத்தி உறுதிப்படுத்திய பின்னரான ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், யாழ்ப்பாண மாநகர சபை, வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று, கிராம அலுவலர் பிரிவு ஜே/84 வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை "தம்பாலையடியும் பராயடியும்" விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 10 1/2 இதில் சொரியலாய் 5/45 பங்கு. இது மறு பங்காளர்கள் தத்தமது பாகங்களை நிந்தப்படுத்திக் கொண்டது போக மீதிப் பாகத்தை நிந்தப்படுத்தி நீண்டகாலமாக ஆட்சி பண்ணியபடி, உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ் பத்மகாந்தன் அவர்களால் 09.05.2021ல்தயாரித்த 289 ம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1 என சுட்டியபடி விஸ்தீரண நிலப்பரப்பு குளி 12.92 ம் வீடும், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும், கடையும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும்"

கிழக்கு - தம்பு இராஜதுரைக்கும் பெண் வெற்றியம்மாவுக்குமுரிய ஆதனம்
வடக்கு - கலிபா அப்துல்காதர் வீதி
மேற்கு - செல்லப்பா சூசைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்
தெற்கு - சூசை தொம்மையின் ஆதனம் இதனடாங்கலும்

தற்போது இவ்வாதனத்தை எலியாஸ் அமலன் பெண் யூலியற்சகாயமலர் என்பவர் தனது பெயரை எமது ஆதன பதிவில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு முழுமையாகவோ / பகுதியாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்துமூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது எலியாஸ் அமலன் பெண் யூலியற் சகாயமலர் என்னும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பெறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(CR 38541)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று சங்காபிசேகம்

வட்டுக்கோட்டை, நவ. 28

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகாம்பிகா ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து சுவாமிவீதி வலம் வருதலும் இடம்பெறும். (ஒ.இ)


## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் கல்லூரி வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய புதிய மாடி வீடும், தனி வீடும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

(cs47860) (2.6)

077 790 9318


## மரண அறிவித்தல்



செல்வி

### சித்திராங்கதேவி கந்தையா

சண்டிலிப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சித்திராங்கதேவி கந்தையா நேற்று (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சுந்தரவல்லி தம்பதியரின் அன்பு மகளும், விக்கினேஸ்வரனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சகோதரன்**
**க. விக்கினேஸ்வரன்.**

**சண்டிலிப்பாய் வடக்கு.**
**078 87 45 628.**

(CR 7093)1-6

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### சிவராமலிங்கம் மகேஸ்வரி

தோற்றம் 04.04.1947 — மறைவு 29.10.2022

பெற்றெடுத்த ஏகபுத்திரனை பெற்றோலியத்துக்குத் தந்து பெருமை சேர வாழ்ந்து - மண்ணில் உற்றார் உறவினர்களைப் பேணி வாழ்ந்து, பேரக்குழந்தைகளைக் கண்டு மகிழ்ந்து, நற்கதியடைந்த எமது பிராந்திய முகாமையாளர், **சிவதரன் ஐயாவின்** அன்னை **அமரர் சிவராமலிங்கம் மகேஸ்வரி** அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர்கள் நலன்புரிச் சங்கம்**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன**
**வடபிராந்தியக் காரியாலயம்**

(CS 47812) (3/6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 04 . 04 . 1947

மறைவு 29 . 10 . 2022



கடந்த 29.10.2022 ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி

### அமரர் திருமதி மகேஸ்வரி சிவராமலிங்கம்

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் (26.11.2022) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.11.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் ஈடுபட அழைப்பதுடன் அதனைத் தொடர்ந்து இராமநாதன் வீதியில் அமைந்துள்ள **ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில்** இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்களை அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**192, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

(CS 47862 (3/6)

## துணுக்காய் பிரதேச சபை 2023 ஆம் ஆண்டுக்கான வழங்குனர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல்

துணுக்காய் பிரதேசசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட வழங்கு பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 28.11.2022 தொடக்கம் விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விண்ணப்பப் படிவக்கட்டணம் ரூபா 50.00ம், விண்ணப்பப் பதிவுக்கட்டணமாக ரூபா. 1500.00ம் (VAT, NBT நீங்கலாக) செலுத்துதல் வேண்டும். அத்தோடு கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழேயுள்ள கட்டண விபரங்களுக்கு ஏற்றவாறு கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 19.12.2022 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொகுதிகள் :**

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் வேலைகள்
தொகுதி "C" - வாகன திருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும்
தொகுதி "D" - குடிசார் வேலைகள்

| தொ. இல | பொருட்கள் வழங்கல் (பொது) |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/உருக்கு) |
| A - 03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய டோனர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குழியலறை பொருத்திகள், மாபிள்கல் வகைகள், நீர்வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட இரும்பு பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் காட்வெயார் பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டார்கள், மின்சார பல்புக்கள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், காபிக், மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், டயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப் பொருட்கள், கம் சப்பாத்துக்கள் |
| A - 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 14 | இரும்புப் பொருட்கள் |
| A - 15 | கற்கள், மண்வகைகள் |
| A - 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 17 | பனைமரங்கள், சலாகைகள் |
| A - 18 | அலங்காரப் பொருட்கள் |
| A - 19 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A - 20 | தார் |
| தொ. இல | **சேவைகள்/வேலைகள் விபரம்** |
| B - 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழினுட்ப ஆலோசனை வழங்கலும் |
| B - 02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் (காற்று குளிராக்கி, தொலைநகல் நிழற்பட பிரதி இயந்திரம், கணினி, விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரம்) |
| B - 04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின் விசிறிகள், ஜெனரேட்டர் திருத்துதலும் மீள முறுக்குதலும் |
| B - 05 | பதிப்பக வேலை – சகலவித படிவங்கள், ஏனையவை |
| B - 06 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரிப்பும் |
| B - 07 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம் |
| B - 08 | கோலவுடை தைத்தல் |
| B - 09 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B - 10 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B - 11 | அச்சிடுதல் |
| B - 12 | வளிச்சீராக்கி திருத்தம் சேவீஸ் செய்தல் |
| தொ. இல | **வாகன திருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும்** |
| C - 01 | சகல விதமான வாகன திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம் சீற் என்பவற்றிற்கான குசன் வேலை |
| C - 02 | சுகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| C - 03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல் உலோக வேலைகள் |

**குடிசார் வேலைகள்** (Civil works) - ICTAD / CIDA **பதிவு உள்ளவர்கள் மட்டும்**

* கட்டட நிர்மானமும் திருத்தமும்
* வீதி நிர்மானமும் திருத்தமும்
* கிணறு, குழாய் கிணறு அமைத்தல்

| தொ. இல | ஒப்பந்தத்தொகை | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| D - 01 | ரூபா 2,000,000ற்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத்தொகை | ரூபா 2,000 (VAT, NBT நீங்கலாக) |
| D - 02 | ரூபா 2,000,000ற்கு அதிகமானதும் ரூபா 5,000,000 ற்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத்தொகை | ரூபா 3,000 (VAT, NBT நீங்கலாக) |

**நியந்தனைகள்:**

01. வழங்கல்கள், சேவைகள், குடிசார் வேலைகள் 2023ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. பதிவிற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்குண்டு.
03. ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளிற்கு விண்ணப்பிப்போர் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியான படிவங்களில் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கவேண்டும்.
04. பதிவுசெய்துகொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கலை கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமை பிரதேசசபைக்குண்டு.
05. வியாபார பதிவுசான்றிதழில் குறிப்பிட்ட பொருட்கள் சேவைகளுக்கே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவர்.
06. விலைமனுகோரும்போது முன்வராத, கட்டளைகளுக்காக குறித்த நேரத்திற்கு பண்டங்கள் & சேவைகளை வழங்காத, சமர்பிக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் பண்டங்களை வழங்காத வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பெயர் பட்டியலிலிருந்து நீக்கும் உரிமை பிரதேசசபைக்குண்டு.
07. விண்ணப்ப படிவங்களை நேரில் சமர்பிக்கலாம் அல்லது "வழங்குநராக பதிவு செய்வதற்கான விண்ணப்பம்-2023" **என கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு "தவிசாளர், பிரதேசசபை, துணுக்காய்"** எனும் முகவரிக்கு தபால்மூலம் அனுப்பிவைக்க முடியும்.
08. **மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

**அ. அமிர்தலிங்கம்**
**தவிசாளர்**
**பிரதேசசபை, துணுக்காய்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு.வல்லிபுரம் சுப்பையா ஞானசெல்வம்



மலர்வு 04.03.1938 உதிர்வு 24.11.2022

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியை நிரந்தர வதிவிடமாகவும் கனடாவை தற்காலிகமாக வதிவிடமாகவும் கொண்ட திரு. வல்லிபுரம் சுப்பையா ஞானசெல்வம் அவர்கள் 24.11.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. வல்லிபுரம் சுப்பையா திருமதி சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற திரு.ரவாங் சங்கரப்பிள்ளை திருமதி தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், அமரர் கனகம்மா அவர்களின் பாசமிகு கணவரும், வாசுகி (கனடா), தயாழினி (பிரான்ஸ்), செந்தூரன் (கனடா), சுகந்தினி (கனடா), தேவநந்தினி (இலங்கை), பத்மலோஜினி (கனடா) ஹேமாங்கதன் (கனடா), ஸ்ரீருக்மாங்கதன் (கனடா) மற்றும் சப்தசாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உமாதேவி (இந்தியா), சுபத்திராதேவி (கனடா), ரேணுகாதேவி (இலங்கை), புஸ்பநாதன் (அமரர்) மற்றும் உருத்திரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கிருஷ்ணபிள்ளை (அமரர்), தங்கவடிவேல் (அமரர்), தியாகராஜா மற்றும் தில்லைஜோதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார். வள்ளுவன் (கனடா), வீரமோகன் (பிரான்ஸ்), விஜிதா (கனடா), விஜயகுமார் (கனடா), கேதீஸ்வரன் (இலங்கை), இளஞ்செழியன் (கனடா), வாகினி (கனடா), அனுஷா (கனடா) மற்றும் குகவதனி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மாறன் (கனடா), ஹரினி (கனடா), ஜீவலக்ஷ்மன் (பிரான்ஸ்), ரிஷிகேசினி (பிரான்ஸ்), யாகவி (கனடா), யாதவன் (கனடா), கஜானன் (கனடா), விதுஷா (கனடா), வைஷவி (கனடா), ஜதுர்ஷன் (கனடா), யனுசிகா (இலங்கை), சப்தமி (இலங்கை), குயிலினி (கனடா), ஆருஷா (கனடா) ஹரின் (கனடா), சுவஸ்திகா (கனடா), ஆரவ் (கனடா), திவானா (கனடா) மற்றும் சாத்விக் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக :

27.11.2022 ஞாயிற்றுக்கிழமை (5.00 pm to 9.00pm)

29.11.2022 செவ்வாய்க்கிழமை (5.00 pm to 9.00 pm)

இறுதிக்கிரியை 30.11.2022 புதன்கிழமை (11.00 am to 2.30 pm) தகனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

பார்வை இடம் : 8911 Woodbine Avenue, Markham, Ontario.

(CHAPEL RIDGE FUNERAL HOME AND CNEMATION CENTRE)

(CS 22006) 1-6

# பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விழிப்புணர்வு



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் தேசிய போதைப் பொருள் விழிப்புணர்வு செயற்றிட்டம், மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

தென்மராட்சி வலய கலைப்பீட மாணவர்களின் பங்களிப்புடன் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளின் தரம் 9, 10ஆம் வகுப்பு மாணவர்களை இணைத்து இந்தப் போதைப்பொருள் விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

(ம-14.125)


மரநடுகை மாதத்தை முன்னிட்டு வவுனியா நகரசபை கலாசார மண்டப வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. நகரசபை உப நகரபிதா சு.குமாரசாமி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நகரசபை அலுவலர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ம-14)



# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 10 . 1948



மறைவு 27 . 11 . 2022

## அருணாசலம் கந்தசாமி

பாலாவி தெற்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் கந்தசாமி அவர்கள் நேற்று (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அருணாசலம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், தருமராசா சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சித்தி அவர்களின் அன்புக் கணவரும், பரமசாமி, செல்லம்மா, அமரர் பொன்னையா, சரஸ்வதி, ஞானேஸ்வரி, அசோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபாசினி (பிரான்ஸ்), அமரர் மஞ்சுளா, குணாளன் (நிறைவேற்று பணிப்பாளர் சோபிகன் இன்ஜினீயரிங் & கொன்ஸ்ரக்சன்), தர்சினி (ஆசிரியை - யா/கெற்பேலி அ.த.க. பாடசாலை), கவிதா (பிரான்ஸ்), கவிசலா (குடியேற்ற உத்தியோகத்தர்-கண்டாவளை பிரதேச செயலகம்), கௌசிகா (இலங்கை வங்கி - கைதடி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரபாகரன் (பிரான்ஸ்), தவசிங்கம் (கண்ணன் -கட்டட ஒப்பந்தகாரர்), மோகன்குமார் (பிரான்ஸ்), சந்திரகலா (ஆசிரியை - யா/வரணி மத்திய கல்லூரி), ரசிகாந்தா, பிரதாப் (ஆசிரியர் - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஷயன், ஆகரன், ஆதித்யன், வர்மிகா, சர்மிகா (பிரான்ஸ்), அஸ்நிகன், சைனுஜன், சோபிகன், ஹரிஸ்ணா (மாணவர்கள்-கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை), ரித்[illegible], அத்விகா, அதிரன், சஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவி பெரிய சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

க.குணாளன்(மகன்)
077 236 5620

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








உதயனின் 38 ஆவது அகவையை முன்னிட்டு உதயன் பணிமனையில் நேற்றுக் குருதிக்கொடை நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் பலர் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினார்கள்.

# அரசுக்கு எதிராக மக்களை வீதிக்கு கொண்டுவரத் தயார்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, நவ.28

நாட்டில் இப்போது அனைத்துமே தலைகீழாக நடைபெறுகின்றன. ஜனநாயகத்துக்காக இலட்சக்கணக்கான மக்களை வீதிக்குக் கொண்டுவரத் தயார்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மானல்லவில் நடந்த கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டு மக்கள் ஒன்றாகக் கூடுவது தொடர்பில் ஜனாதிபதியும் அரசாங்கமும் பெரும் அச்சம் கொண்டிருக்கின்றனர்.

அனுமதியின்றி வீதியில் செல்ல வேண்டாம் எனக் கூறுவதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரம் என்ன?

அவர் அவ்வாறு ஏதேனும் சவால் விடுத்தால் பல்லாயிரக்கணக்கான மக்களுடன் வீதியில் இறங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது.

அச்சுறுத்தல்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் நாம் ஒருபோதும் அஞ்சமாட்டோம். அவ்வாறான கட்டுப்பாடுகளால் எம்மைத் தடுத்து நிறுத்த முடியாது.

நாட்டின் அனைத்துத் துறைகளும் இன்று வீழ்ச்சியடைந்துள்ளன. நாட்டை இவ்வாறான நிலைக்குத் தள்ளியவர்கள் இன்று சாம்பலைத் துடைத்துவிட்டு மீண்டும் எழுச்சிபெற முயற்சிக்கின்றனர் - என்றார். (எ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சி ஒன்றில் லாபம் காண்பீர்கள். நீண்டநாள் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதிய அணுகுமுறையைக் கையாளுவீர்கள். நிதிநிலை உயரும்.

**இடபம்:** வியாபாரத்தை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பு நலம் தரும். தடைப்பட்ட செயல்களை இன்று மீண்டும் தொடர்வீர்கள். உங்கள் முயற்சி வெற்றியாகும்.

**மிதுனம்:** இரண்டு நாள்களாக இருந்த நெருக்கடிகள் விலகும். முயற்சி லாபமாகும். எதிர்பார்த்த நல்ல செய்தி வீடு தேடி வரும். உங்கள் செல்வாக்கு உயரும். குழப்பம் தீரும்.

**கடகம்:** செயல்களில் கவனம் தேவை. புதிய முயற்சிகள் வேண்டாம். மற்றவரை நம்பிச் செய்யும் செயல் இழுபறியாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** நண்பர்களின் ஒத்துழைப்புடன் திட்டமிட்ட செயல்களைச் செய்து முடிப்பீர்கள். தம்பதி இடையே இருந்த சங்கடம் தீரும். ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வீர்கள். பாராட்டுப் பெறுவீர்கள்.

**கன்னி:** உயர்ந்த இடத்தில் இருப்பவர்களை சந்திப்பீர்கள். முயற்சி ஒன்று லாபம் தரும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர்களின் ஆதரவு உண்டு.

**துலாம்:** பூர்வீக சொத்துப் பிரச்சினை மீண்டும் தோன்றும். பேச்சில் நிதானம் அவசியம். முயற்சியில் முழுமையாக ஈடுபட்டாலும் முடிவு உங்களுக்கு எதிர்மறையாகும். சேமிப்பில் கவனம் செல்லும்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்பு ஒன்று தள்ளிப்போகும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். அனுகூலம் காண்பீர்கள்.

**தனுசு:** துணிச்சலுடன் செயற்பட்டு நீங்கள் எண்ணிய செயலைச் செய்து முடிப்பீர்கள். பணியாளர்கள் ஒத்துழைப்புடன் தொழிலை விரிவு செய்வீர்கள். நிதிநிலை உயரும்.

**மகரம்:** உறவினர் ஆதரவுடன் நீண்டநாள் பிரச்சினை ஒன்றுக்கு முடிவு காண்பீர்கள். கேட்ட இடத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட சங்கடம் விலகும்.


**கும்பம்:** வேலைகளின் காரணமாக சலிப்பு மேலிடும். செயல்களில் குழப்பம் ஏற்படும். மற்றவர்கள் உங்களை அலட்சியம் செய்வதாக நினைத்து வருந்துவீர்கள். அலைச்சல் கூடும்.

**மீனம்:** அலைச்சல் அதிகரிக்கும். எடுத்த வேலையை முடிக்க முடியாமல் சங்கடப்படுவீர்கள். பணியிடத்தில் சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டி வரும். செயல்களில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிழக்கு பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொங்கு தமிழ் நினைவுத்தூபியில் மாவீரர் நாள் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. (ஒ.125)



யாழ். பல்கலை



முல்லைத்தீவு கடற்கரை




கனகபுரம்



இரணைப்பாலை

## வானில்...



ஈகச்சுடர் ஏற்றப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்தைச் சூழ நேற்று சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் மற்றும் விஞ்ஞானபீட வளாகங்களைச் சூழ சுட்டிகளால் சுடர்களும் ஏற்றப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தினுள்ள மாவீரர் நினைவுத்தூபியில் அகவணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர் பண்டிதரின் தாயாரால் பொதுச்சுடரேற்றப்பட்டது.

சமநேரத்தில் மாணவர்களால் சிவப்பு மஞ்சள் புகைக்கூண்டும் ஒளியேற்றப்பட்ட சுடருடன் வானில் பறக்கவிடப்பட்டது.

மாணவர்களால் மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

மாணவர்கள், மாவீரர் பெற்றோர், பொது மக்கள், பேராசிரியர்கள், பல்கலைக் கழக உத்தியோகத்தர்கள், கல்வி சாரா ஊழியர்கள், வெளிநாட்டுப் பிரஜைகள் என்று பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். (அ-ஒ-125)

## இ.போ.ச.வினர்...

வசாவிளான் பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்து மோதியதில் மாணவன் அண்மையில் காயமடைந்திருந்தான். இந்தச் சம்பவத்தையடுத்து சாரதி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. சாரதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையோரையும் கைது செய்து பாதுகாப்பை உறுதிப்படுத்தித்தரவேண்டும் எனக் கோரி இந்தப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வதாக அறிவித்துள்ளனர். (ஒ-26)

## கண்ணீரால்...

தம் பிள்ளைகளின் தமிழீழ தனியரசுக்காக வித்தாகிப்போன உயிர்களின் பெயர்களை சொல்லிச் சொல்லி பலரும் விம்மி விம்மி அழுத காட்சிகள் அங்கிருப்போரையும் கண்ணீர் சிந்த வைத்தது. மாவீரர்களின் திருவுருவப்படத்துக்கு மாலை அணிவித்து பூக்கள் தூவி, ஊதுபத்திகளை ஏற்றி வைத்து, படையல்கள் இட்டு அஞ்சலித்த காட்சிகள் கண்களை குளமாக்கின.

நேற்று இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தை மீளவும் நினைவுபடுத்தின.

அன்றைய காலங்களில் மாவீரர் நாளில் மாலை நேரம், தமிழர் தாயகம் இயல்பை முடக்கி அமைதிநிலைக்குள் சென்றுவிடும். அதேபோன்று நேற்றும் தாயக தேசம் அமைதியானது. மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்ட துயிலும் இல்லங்கள் அல்லது துயிலும் இல்லங்களுக்கு அருகிலுள்ள பொது இடங்களில் நேற்று மாலையிலிருந்தே மக்கள் அணிதிரளத் தொடங்கினர். மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள், உற்றார், உரித்துடையோர், சமர்களமாடிய சக போராளிகள் எனப் பலரும் மாவீரர்நாளை நினைவு கூரத் திரண்டனர்.

கடந்த காலங்களில் சிறிலங்கா இராணுவ அடக்குமுறை மற்றும் நீதிமன்றத் தடைகள் காரணமாக முடங்கியிருந்தவர்கள், இம்முறை அத்தகைய எந்த வொரு நேரடி நெருக்கடியும் இல்லாதமையால் வழமைக்குமாறாக அணி திரண்டனர். துயிலும் இல்லங்களின் ஏற்பாட்டாளர்களே எதிர்பார்க்காதளவுக்கு மக்கள் அணிதிரண்டு, தங்கள் காவல் தெய்வங்களைப் பூசித்தனர்.

துயிலும் இல்லங்களில் நேற்று மாலை 6:05 மணிக்கு நினைவு ஒலி எழுப்பப்பட்டது. சரியாக 6:06 மணிக்கு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து 6:07 மணிக்கு ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டன. அதன்பின்னர் துயிலும் இல்லப் பாடல் ஒலிக்கவிடப்பட்டது.

அப்போது துயிலும் இல்லங்களில் நிலவிய கனத்த மௌனமும் விம்மல்களும் நெஞ்சைப் பிசைவதாக அமைந்தன. துயிலும் இல்லப் பாடலின் 'எங்கே எங்கே ஒரு தரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்' என்ற வரிகள் இசைக்கப்படும்போது உறவுகளின் கதறல்கள் கண்ணீரை வரவழைத்தன.

தாம் வரித்துக்கொண்ட கொள்கைக்காக மண்ணுக்காக மாண்டுபோன தமது பிள்ளைகளின் பெயரைச் சொல்லி - அவர்களின் பழைய நினைவுகளைக் கூறி தாய்மார்கள் கதறியழ அதனைப் பார்த்து ஏனையோரும் கண்ணீர் மல்கினர். தங்களின் பிள்ளைச் செல்வங்கள் சிறு வயதில் என்ன வகையான உணவுகளை விரும்பி உண்டார்களோ அந்த உணவு வகைகளை வீட்டிலிருந்து தயாரித்துக் கொண்டு வந்த தாய்மாரும், உறவினர்களும், களமாடிய சக தோழர்களும், தமது பிள்ளைகளின் நினைவாக ஒதுக்கப்பட்ட ஈகச்சுடர் முன்பாக - திருவுருவப் படத்துக்கு முன்னால் படைத்து வைத்து புரண்டு அழுதனர்.

புலிகளின் காலத்தில் தமது பிள்ளைகளின் வித்துடல் புதைக்கப்பட்ட கல்லறை முன்பாக அமர்ந்து அதனைக் கட்டியணைத்து உறவுகள் கதறியழுவார்கள். போரின் பின்னர் கல்லறைகள் சிறிலங்கா அரச படைகளால் நிர்மூலமாக்கப்பட்டமையால், ஈகச்சுடர் ஏற்றுவதற்கான தடிகளே நடப்பட்டிருந்தன. அதில் தமது பிள்ளைகளின் படங்களை வைத்து பெற்றோர் கதறியழுதனர்.

கடந்த பல ஆண்டுகளாக அடக்கி வைத்திருந்த தங்கள் அழுகைகளை அவர்கள் கொட்டித்தீர்த்தனர்.

தமிழர் தாயகத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 8 மாவட்டங்களிலும் உள்ள 31 துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் நினைவேந்தப்பட்டது. (அ-ஒ-5-7-20-26-113-213-110-56-19-18-125)

## பேராதனைப்...

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் தமிழ் மாணவர்களால் பிரத்தியேகமான இடத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. (அ-ஒ-125)

## மாவீரர்நாளில்...

நினைவுருவப்படத்தை வெட்டி எடுத்துச் சென்றனர். பொலிஸார் வெட்டி எடுத்துச் சென்ற திருவுருவப்படத்துக்கு கறுப்பு வர்ணம் தீட்டி மாவீரர் நாள் நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டது. (அ-ஒ-5-110)

## ஒளிந்திருந்து...

பொலிஸார் செயற்பட்டனர்.

மாவீரர் நாளான நேற்று எள்ளங்குளம் துயிலும் இல்லம் முன்பாக மாவீரர்களுக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்தச் சமயத்தில் அங்குள்ள இராணுவ முகாமில் ஒளித்திருந்து இராணுவத்தினர் ஒளிப்படங்களை எடுத்தனர். அதேவேளை ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தும் வகையில் படையினர் நடந்துகொண்டனர்.

எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தை இடித்து அழித்த இராணுவத்தினர் அவ்விடத்தில், 551ஆவது படைப்பிரிவின் முகாமை அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26)

## மாவீரர்நாளை...

தேசிய மக்கள் முன்னணியின் பெயரால் துண்டறிக்கைகள் வீசப்பட்டிருந்தன.

ஆனாலும், தமிழ் மக்கள் அரச அடிவருடிகளின் சதியில் சிக்காமல் வழமை போன்று துயிலும் இல்லங்களில் நேற்று அணிதிரண்டு மாவீரர்களை அஞ்சலித்தனர். (அ-ஒ-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்பில், செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன அங்கத்தவர்களின் பிள்ளைகள் 20 பேருக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம-14,159)



மரநடுகை மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேசசபையினரால் பிரதேச சபைக்கு முன்பாகவுள்ள பேருந்துத் தரிப்பிடத்துக்கு அருகில் மரக்கன்றுகள் அண்மையில் நடப்பட்டன. (ச-159)


## Pharmacist தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் மருந்தகம் ஒன்றிற்கு அனுபவமுள்ள Pharmacist தேவை.

077 8980 276

## அப்பம் 4 PM

யாழ்பாடி விடுதி / உணவகம்
51. அம்மன் வீதி. நல்லூர். யாழ்ப்பாணம்.
021 222 6868/ 0777 3400 26

## தேவை

யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்தியிலுள்ள பூங்கன்றுகள் விற்பனை நிலையத்துக்கு பராமரிப்பாளர் தேவை. (ஆண், பெண்) 3 மைல் சுற்றளவுக்குள் உட்பட்டவர்கள்

தொடர்பு : 075 944 4601 (CS21985)(3-6)




ஈழப்போராட்ட இயக்கங்களில் ஒன்றான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் மறைந்த பத்மநாபாவின் 71ஆவது ஜனனதின நிகழ்வு மன்னாரிலுள்ள மாவட்ட அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டு அவரது திருவுருவப் படத்துக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (ச-213)



# அபுதாபியில் இந்துக் கோவில்: சிவசேனை அமைப்பு தரிசனம்

யாழ்ப்பாணம், நவ. 28

ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகர் அபுதாபியில் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுவரும் இந்து ஆலயத்தை சிவசேனை அமைப்பைச் சேர்ந்த மறவன்புலவு சச்சிதானந்தம் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டு தரிசித்துள்ளார்.

அபுதாபி அருகே அபு முரேகாவில் 55 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் பிரம்மாண்ட இந்துக் கோயில் கட்டப்பட்டுள்ளது. இதனை கடந்த மாதம் அந்நாட்டு அமைச்சர் நஹ்யான் பின் முபாரக் கோலாகலமாகத் திறந்துவைத்தார். இந்த நிலையில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் மற்றும் இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் ஆகியோர் அண்மையில் நேரில் பார்வையிட்டுள்ளனர். (ச-27)


## TECHNO WORLD

### தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

### புதிய கல்வியாண்டு A/L 2024

- திகதி - 03.12.2022 சனிக்கிழமை
- நேரம் - 7.30 a.m

(தேசிய, மாவட்ட ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழகதெரிவு)

தொடர்புகளுக்கு : 077 017 5346




வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள கிறிஸ்து அரசர் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா ஆலயத்தின் பங்குத்தந்தை தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. (ம-14)


## குவைத் நாட்டில் தொழில்வாய்ப்பு

1. முடிதிருத்துநர் ( Saloon Barber)
   அடிப்படை சம்பளம் 140000 + கமிஷன்
2. Spa Therapist (ஆண்கள்)
   சம்பளம் 180000+ கமிஷன்
   குறைந்தது இரண்டு ஆண்டுகள் தொழில் அனுபவம்
3. தச்சு தொழிலாளிகள் (Carpenters)
   அடிப்படை சம்பளம் 220000 + கமிஷன்
4. Aluminium Fabricatiors (அலுமினியம் பொருத்துனர்கள்)
   அடிப்படை சம்பளம் 220000+ கமிஷன்
   குறைந்தது இரண்டு ஆண்டுகள் தொழில் அனுபவம்
5. Quantity surveyor (Carpentry work)
   Salary 450000+ over time
6. Draughtsman, Carpentry Foreman
   450000+ overtime

உங்கள் சுயவிவரங்களை கீழ் காணும் WhatsApp இலக்கத்திற்கு உடனடியாக அனுப்பி விடவும்.

(CS 10551)-6

தொடர்புகொள்ள:0777 22 82 31


# கட்டடத் தொகுதி திறப்பும் பரிசளிப்பு நிகழ்வும்



வட்டுக்கோட்டை சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தொகுதி திறப்பும் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலை அதிபர் ப.சிவலோகநாதன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.

பேராசிரியர் ராஜராஜன் மற்றும் திருமதி அகிலா ராஜராஜன் ஆகியோரின் 8 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் வித்தியாசாலையின் கட்டடத்தொகுதி புதுப்பிக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டது. அத்துடன் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்காக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையும் இதன்போது அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. தொடர்ந்து மாணவர் கலைநிகழ்வுகளும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றன. (ச-125)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு.

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்
077 814 7389
077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.